# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2107/22 - 2019 ජනවාරි මස 22 වැනි අඟහරුවාදා - 2019.01.22

*2107/22 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: KUDS/LND/01/ACQ/03.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/8/2012/PC/68.

வட்டப்பிட்டிய வாராந்தச் சந்தையை அமைப்பதற்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப் பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவில், பரகடுவ கிராம அலுவலர் பிரிவில், பத்பேரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள, இரத்தினபுரி நில அளவை அதிகாரி அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இர/325 இலக்கமும் 2018.11.06 ஆந் திகதியுமுடைய நில அளவைத் திட்டப்படத்தில் துண்டு இல. 01 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.2351 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித் துண்டின் விபரம் :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : புஸ்ஸெல்ல தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : வ/ப. புஸ்ஸெல்லாவ பயிர்ச் செய்கைக் கம்பனி, இல. 590, காலி வீதி, கொழும்பு 03, காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, இல. 475, கடுவெல வீதி, பத்தரமுல்லை; விஸ்தீரணம் : 0.2351 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு குருவிட்ட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 04 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

திலினி தர்மதாச,
பிரதேச செயலாளர்,
குருவிட்ட.

பிரதேச செயலகம்,
குருவிட்ட,
2019, சனவரி 18.

2 - 242